தலைமைச் செயலகத்தில், நேற்று (30.08.2023) நகராட்சி நிருவாகத் துறை அமைச்சர் கே.என்.நேரு தலைமையில் பெருநகர சென்னை மாநகராட்சி பகுதிகளில் சென்னை குடிநீர் வாரியத்தின் சார்பிலும் மற்றும் பிற மாவட்டங்களில் தமிழ்நாடு குடிநீர் வடிகால் வாரியத்தின் சார்பிலும் மேற்கொள்ளப்பட்டுவரும் குடிநீர் வழங்கல் தொடர்பான ஆலோசணை கூட்டம் நடைபெற்றது. இக்கூட்டத்தில் அரசு கூடுதல் தலைமைச் செயலாளர்/ பெருநகர சென்னை மாநகராட்சி ஆணையாளர், மரு.ஜெ.ராதாகிருஷ்ணன், அரசு முதன்மை செயலாளர், நகராட்சி நிர்வாகம் மற்றும் குடிநீர் வழங்கல் துறை, முனைவர்.தா.கார்த்திகேயன், தமிழ்நாடு நகர்ப்புற உள்கட்டமைப்பு நிதி சேவைகள் நிறுவனத் தலைவர்/ அரசு முதன்மை செயலாளர், மரு.எஸ்.விஜயகுமார், சென்னை குடிநீர் வாரிய மேலாண்மை இயக்குநர், ஆர். கிர்லோஷ் குமார், தமிழ்நாடு குடிநீர் வடிகால் வாரிய மேலாண்மை இயக்குநர், வி.தட்சிணாமூர்த்தி, பேரூராட்சிகளின் இயக்குநர், கிரன் குராலா, நகராட்சி நிர்வாக இயக்குநர், சிவராசு, ஊரக வளர்ச்சித் துறை மற்றும் நீர்வளத் துறை அலுவலர்கள், தலைமைப் பொறியாளர்கள் மற்றும் உயர் அலுவலர்கள் கலந்து கொண்டனர்.

இந்தியாவிலேயே மறுசுழற்சி மற்றும் மறுபயன்பாட்டில்

சென்னை - முன்னோடி மாநகரமாகத் திகழ்கிறது!

அமைச்சர் கே.என்.நேரு பேச்சு!

சென்னை, ஆக.31- நகராட்சி நிருவாகத் துறை அமைச்சர் கே.என். நேரு அவர்கள் நேற்று (30.08.2023) நெதர்லாந்து நாட்டின் சார்பாக சென்னையில் செயல்படுத்தப் பட உள்ள “1000 ஏரிகள் கொண்ட அபூர்வ சென்னை” திட்டத்தினை சென்னை லிட்டில் பிளவர் கான்வென்டில் தொடங்கி வைத்தார்.

இந்நிகழ்ச்சியில் அமைச்சர் கே.என்.நேரு அவர்கள் பேசியதாவது :

முதலமைச்சர் அவர்கள் சென்னை மற்றும் பிற மாவட்டங்களில் குடிநீர்த் திட்டப் பணிகள் மேற்கொள்வதற்காக ரூபாய் 40 ஆயிரம் கோடி வழங்கியுள்ளார்கள். பெருநகர சென்னை மாநகராட்சிக் குட்பட்ட பகுதிகளில் சென்னை குடிநீர் வாரியத்தின் சார்பிலும், பிற மாவட்டங்களில் தமிழ்நாடு குடிநீர் வடிகால் வாரியத்தின் சார்பிலும் மற்றும் தனி குடிநீர் திட்டப் பணிகளும் மேற்கொள்ளப்பட்டு வருகிறது.

பெருநகர சென்னை மாநகராட்சிக்குட்பட்ட பகுதிகளில் நாளொன்றுக்கு சுமார் 1000 மில்லியன் லிட்டருக்கும் மேலாக குடிநீர் வழங்கப்பட்டு வருகிறது. இதன்மூலம் சுமார் 85 இலட்சத்திற்கும் மேற்பட்ட பொதுமக்கள் பயன் பெற்று வருகிறார்கள். மேலும், பிற மாவட்டங்களில் தனிக் குடிநீர் திட்டம் நீங்கலாக தமிழ்நாடு குடிநீர் வடிகால் வாரியத்தின் சார்பில் 544 கூட்டுக் குடிநீர் திட்டங்கள் மூலம் நாளொன்றுக்கு 2104 மில்லியன் லிட்டர் குடிநீர் வழங்கப்பட்டு வருகிறது. இதன் மூலம், 12 மாநகராட்சிகள், 67 நகராட்சிகள், 344 பேரூராட்சிகள் மற்றும் 52,321 ஊரக குடியிருப்புகளில் உள்ள 4.53 கோடிக்கும் மேற்பட்ட பொதுமக்கள் பயன்பெற்று வருகிறார்கள். தமிழ்நாடு முழுவதும் நாளொன்றுக்கு 5 கோடியே 36 இலடசத்திற்கும் மேற்பட்ட பொதுமக்களுக்கு சுமார் 3122 மில்லியன் லிட்டர் பாதுகாக்கப்பட்ட குடிநீர் வழங்கப்பட்டு வருகிறது.

இனி வரும் காலத்திற்குத் தேவையான குடிநீரினை வழங்குவதற்காக பல்வேறு நடவடிக்கைகளை தமிழ்நாடு அரசு எடுத்து வருகிறது. இத்தேவையினை ஈடு செய்ய தமிழ்நாடு அரசு தொழில் நுட்ப ரீதியான திட்டங்களையும், அண்டை மாநில நதிநீர் பங்கீடு மற்றும் கடல் நீரை குடிநீராக்கும் திட்டங்களையும் செயல்படுத்தி வருகிறது. சென்னை மாநகரம் இந்தியாவிலேயே மறுசுழற்சி மற்றும் மறு பயன்பாட்டில் முன்னோடி நகரமாக தொடர்ந்திட தமிழ்நாடு அரசு பல்வேறு திட்டங் களை செயல்படுத்தி வருகிறது.

அதனடிப்படையில் 1990ஆம் ஆண்டு முதன்முதலாக இரண்டாம் நிலை சுத்திகரிப்பு நிலையம் அமைக்கப்பட்டது. சுத்திகரிக்கப்பட்ட கழிவுநீர் தொழிற்சாலைகளின் பயன்பாட்டிற்காக மணலி மற்றும் அதன் அருகில் செயல்பட்டுவரும் தொழிற்சாலைகளுக்கு தற்போது வரை வழங்கப்பட்டு வருகிறது. மேலும் கொடுங்கையூர் மற்றும் கோயம்பேட்டில் தலா 45 மில்லியன் லிட்டர் கொள்ளளவு கொண்ட எதிர்சவ்வூடு பரவுதல் மூலமாக இரண்டு மூன்றாம் நிலை சுத்திகரிப்பு நிலையங்கள் செயல்பட்டு வருகிறது. இந்நிலையங்கள் மூலம் பெறப்படும் சுத்திகரிக்கப்பட்ட நீர் மணலி, எண்ணூர், இருங்காட்டுக் கோட்டை, ஓரகடம் மற்றும் திருப்பெரும்புதூர் பகுதிகளில் அமைந்துள்ள தொழிற்சாலைகளுக்கு வழங்கப்படுகிறது.

சென்னைக் குடிநீர் வாரியம், தொழிற்சாலைகள் மற்றும் நிறுவனங்கள் உட்பட மாநகரத்தின் மொத்த நீர்த் தேவையில் தற்போது கழிவு நீர் மறு சுழற்சி மற்றும் மறு பயன்பாடு மூலம் சுமார் 10 சதவிகித தேவையினை வழங்கி வருகிறது. மீஞ்சூர் மற்றும் நென்மேலியில் நாளொன்றுக்கு 110 மில்லியன் லிட்டர் உற்பத்தி திறன் கொண்ட கடல்நீரை குடிநீராக்கும் நிலையங்கள் செயல்பட்டு வருகிறது. மேலும், நெம்மேலியில் கூடுதலாக நாளொன்றுக்கு 150 மில்லியன் லிட்டர் உற்பத்தி திறன் கொண்ட கடல் நீரை குடிநீராக்கும் நிலையம் விரைவில் பயன்பாட்டுக்கு கொண்டு வரப்பட உள்ளது. முதலமைச்சர் அவர்கள், 21.08.2023 அன்று, பேரூரில், நாளொன்றுக்கு 400 மில்லியன் லிட்டர் உற்பத்தி திறன் கொண்ட கடல்நீரைக் குடிநீராக்கும் நிலையத்திற்கு அடிக்கல் நாட்டினார்கள். இப்பணிகள் அனைத்தும் முடிக்கப் பெற்ற பின்னர், கடல்நீரை குடிநீராக்கும் நிலையங்களிலிருந்து நாளொன்றுக்கு 750 மில்லியன் லிட்டர் சுத்திகரிக்கப்பட்ட குடிநீர் பொதுமக்களுக்கு வழங்கப்படும்.

நெதர்லாந்து அரசின் நிதியுதவியுடன் செயல்படுத்தப் படவுள்ள இத்திட்டத்தின் மூலம் நீர் வழங்கலின் சம நிலை ஏற்படுத்திட முடியும். இத்திட்டம் சுற்றுச் சூழல் மேம்பாட்டு அடிப்படையில் மேற்கொள்ளப் பட உள்ளதால் பாதுகாப்பான குடிநீர் வழங்குவதற்கான வழிவகைகள் ஏற்படுத்தப்படும். பெருநகர சென்னை மாநகராட்சிக்கு அருகிலுள்ள திருவள்ளூர், செங்கல்பட்டு மற்றும் காஞ்சிபுரம் மாவட்டங்களில் உள்ள ஏரிகள், குளங்கள் மற்றும் பிற நீர்நிலைகளை இத்திட்டத்தின் மூலம் மேம்படுத்துவதால் எதிர்காலங்களில் சென்னைக்குத் தேவைப்படும் குடிநீர் முழுமையாக வழங்கிட முடியும். முதலமைச்சர் அவர்களின் தலைமையில் நடைபெறும் இவ்வரசு இத்திட்டத்திற்குத் தேவையான அனைத்து உதவிகளையும் எவ்வித தொய்வுமின்றி வழங்கிடும். மேலும், இத்திட்டத்திற்குத் தேவையான அனைத்து ஒருங்கிணைப்புப் பணிகளும் நகராட்சி நிருவாகத் துறையின் சார்பில் மேற்கொள்ளப்படு.

இவ்வாறு அமைச்சர் கே.என்.நேரு தெரிவித்தார்.

இந்நிகழ்வில், அரசு கூடுதல் தலைமை செயலாளர் / தலைவர், தமிழ்நாடு தொழில் முதலீட்டு கழகம், ஹென்ஸ் ராஜ் வர்மா, அரசு முதன்மை செயலாளர், நகராட்சி நிர்வாகம் மற்றும் குடிநீர் வழங்கல் துறை, முனைவர்.தா.கார்த்திகேயன், சென்னை குடிநீர் வாரிய மேலாண்மை இயக்குநர், ஆர்.கிர்லோஷ் குமார், நெதர்லாந்து நாட்டின் துணை தூதர்கள், ஹெங்க ஓவிங்க் (Henk Ovink), எவூட் டி விட் (Ewout de Wit), ஜெர்மன் நாட்டின் துணை தூதர், மைக்கேல் குச்லர் (Michaela Kuchler), இத்திட்டத்தின் ஒருங்கிணைப்பாளர் ஏவா ஃபென்னஸ் (Ev Pfannes) ஆகியோர் கலந்து கொண்டனர்.

நெல்லை மண்டல தி.மு.க. பொறியாளர் அணி கூட்டம்!

நெல்லை, ஆக. 31- நெல்லை மண்டல தி.மு.க பொறியாளர் அணி ஆலோசனை கூட்டம் பாளையங்கோட்டை ஆர் யாஸ் ஏ.சி மஹாலில் பொறியாளர் அணி தலைவர் துரை.கி.சரவணன் தலைமையில் நடைபெற்றது.

கூட்டத்தில் மாநில பொறியாளர் அணி செயலாளர் கு. கருணாநிதி சிறப்புரையாற்றினார்.

நெல்லை மண்டல பொறுப்பாளர், மாநில பொறியாளர் அணி துணைச் செயலாளர் சி.பிரதீப் மற்றும் மாநில துணைச் செயலாளர் வே.உமாகாந்த் ஆகியர் முன்னிலை வகித்தனர்.

தலைமை கழகம் அறிவித்த கலைஞர் நூற்றாண்டு விழாவை தி.மு.க. பொறியாளர் அணி சார்பாக மாநிலம் முழுவதும் ஒவ்வொரு மாவட்டத்திலும் பொறியியல் கல்லூரிகளில் பேச்சுப்போட்டி, கவியரங்கம், பட்டிமன்ற நிகழ்ச்சிகளை நடத்துவது உள்ளிட்ட பல்வேறு தீர்மானங்கள் நிறைவேற்றப்பட்டது.

நிகழ்ச்சி ஏற்பாட்டினை நெல்லை கிழக்கு மாவட்ட அமைப்பாளர் அருணன் செய்திருந்தார். நெல்லை மத்திய மாவட்ட துணை அமைப்பாளர் அருள்வின் ரெற்றிக்கோ நன்றி கூறினார்.

அந்துமணி சிந்துமணி

அந்துமணி : ஏண்டி சிந்து; அமெரிக்காவின் கலிபோர்னியா சட்டமன்றத்தில், சாதி பாகுபாடுகளுக்கு எதிரான மசோதா நிறைவேற்றப்பட்டுள்ளதாமே ?

சிந்துமணி : ஆமாண்டி அந்து; அமெரிக்காவில், இப்படிப் பட்ட மசோதாவை நிறைவேற்றும் முதல் மாகாணம் கலிபோர்னியா.

சாதி வேறுபாடுகள் பரவி, விளிம்புநிலை மக்கள் ஒடுக்கப் படுவதாக குற்றச்சாட்டுகள் எழுந்த நிலையில், இத்தகைய மசோதா அங்கே நிறைவேற்றப்பட்டிருக்கிறது.

பெரியார் - அண்ணா - கலைஞர், உலக நாடுகள் அனைத்திற்கும் பொதுவாக மிகவும் தேவையானவர்கள் என்பதை, காலம் படிப்படியாக நிரூபணம் செய்து கொண்டிருக்கிறது என்பதற்கு கலிபோர்னியா மசோதா தற்போதைய சான்று !

3 திருக்கோயில்களுக்குச் சொந்தமான

ரூ.5.90 கோடி மதிப்பீட்டிலான நிலங்கள் ஆக்கிரமிப்பிலிருந்து மீட்பு!

இந்து சமய அறநிலையத்துறை அதிரடி நடவடிக்கை!

சென்னை, ஆக. 31 - முதலமைச்சர் மு.க.ஸ்டாலின் அவர்களின் வழிகாட்டுதலின் படியும், இந்து சமய அறநிலையத் துறை அமைச்சர் பி.கே. சேகர்பாபு அறிவுறுத்தலின் படியும் இந்து சமய அறநிலையத் துறையின் பகட்டுப் பாட்டிலுள்ள திருக்கோயில்களுக்குச்h சொந்தமானh சொத்துக்களைj ஆக்கிர மிப்பாளர்களிடமிருந்து மீட்கும் பணிகள் துரிதமாக நடைபெற்று வருகின்றன. அந்த வகையில் நேற்று (30.08.2023) தூத்துக்குடி மற்றும் நாகப்பட்டினம் மாவட்டங்களைச் சேர்ந்த 3 திருக்கோயில்களுக்கு சொந்தமான ரூ.5.90 கோடி மதிப்பீட்டிலான நிலங்கள் ஆக்கிரமிப்பிலிருந்து மீட்கப்பட்டு திருக்கோயில்கள் வசம் சுவாதீனம் பெறப்பட்டுள்ளது.

தூத்துக்குடி மாவட்டம், விளாத்திகுளம், மீனாட்சி சுந்தரேஸ்வரர் திருக்கோயிலுக்குச் சொந்தமான 22 ஏக்கர் 48 சென்ட் புன்செய் நிலம் ஆக்கிரமிப்பு செய்யப்பட்டிருந்தது. தூத்துக்குடி இணை ஆணையர் நீதிமன்ற உத்தரவின்படி சட்டப்பிரிவு 78ன் கீழ் நடவடிக்கை எடுக்கப்பட்டு, தூத்துக்குடி உதவி ஆணையர் டி.சங்கர் முன்னிலையில், வருவாய் மற்றும் காவல் துறையினர் உதவியோடு ஆக்கிரமிப்பு அகற்றப்பட்டு திருக்கோயில் வசம் சுவாதீனம் பெறப்பட்டது. இதன் தற்போதைய மதிப்பு ரூ. 2 கோடியாகும்.

திருவாரூர் மாவட்டம், நன்னிலம் வட்டம், சிறுபுலியூர் அருள்மிகு கிருபா சமுத்திர பெருமாள் திருக்கோயிலுக்குச் சொந்தமான 24 ஏக்கர் நன்செய் நிலமும் மற்றும் திருப்பள்ளி முக்கூடல் கிராமம் அருள்மிகு தியாகராஜ சுவாமி திருக்கோயிலுடன் இணைந்த அபிசேகக் கட்டளைக்குச் சொந்தமான 19 ஏக்கர் 54 சென்ட் நன்செய் நிலமும் ஆக்கிரமிப்பு செய்யப்பட்டிருந்தது. நாகப்பட்டினம் இணை ஆணையர் நீதிமன்ற உத்தரவின்படி சட்டப்பிரிவு 78 ன் படி இன்று நாகப்பட்டினம் இணை ஆணையர் வி.குமரேசன் மற்றும் திருவாரூர் உதவி ஆணையர் (கூ.பொ.) ப.ராணி ஆகியோர் முன்னிலையில் வருவாய் மற்றும் காவல் துறையினர் உதவியோடு ஆக்கிரமிப்புகள் அகற்றப்பட்டு திருக்கோயில்கள் வசம் சுவாதீனம் பெறப்பட்டது. மீட்கப்பட்ட சொத்துக்களின் மதிப்பு ரூ.3.90 கோடியாகும்.

ஆகமொத்தம் இன்றைய தினம் மீட்கப்பட்ட 3 திருக்கோயில்களுக்குச் சொந்தமான சொத்துக்களின் மதிப்பு ரூ.5.90 கோடியாகும்.

இவ்வாறு அரசின் செய்திக் குறிப்பில் தெரிவிக்கப்பட்டுள்ளது.

‘வாட்ஸ் அப்’ பில் வந்த செய்தி!



திருவொற்றியூர் அரசு உதவிபெறும் பள்ளி - மஹாவீர் ஜெயின் பள்ளி

மாணவ - மாணவிகளுக்கு திராவிட மாடல் அரசின் விலையில்லா மிதிவண்டிகள்!

மாநில மீனவர் அணி துணைத் தலைவர் கே.பி.சங்கர் எம்.எல்.ஏ. வழங்கினார்!

சென்னை, ஆக.31- திருவொற்றியூர் அரசு உதவி பெறும் வெள்ளையன் செட்டியார் மேல் நிலைப் பள்ளி மற்றும் மஹாவீர் ஜெயின் மேல் நிலைப்பள்ளியில் பயிலும் 332 பதினோராம் வகுப்பு பயிலும் மாணவ - மாணவியருக்கு திராவிட மாடல் அரசின் விலையில்லா மிதிவண்டியை மாநில மீனவரணி துணைத்தலைவர், திருவொற்றியூர் சட்டமன்ற உறுப்பினர் கே.பி.சங்கர் வழங்கினார்.

கழக மாநில மீனவர் அணி துணை தலைவர் திருவொற்றியூர் சட்டமன்ற உறுப்பினர் கே.பி.சங்கர் திருவொற்றியூர் அரசு உதவி பெறும் பள்ளியான வெள்ளையன் செட்டியார் மேல் நிலைப் பள்ளியில் 107 மாணவர்களுக்கும் 180 மாணவிகளுக்கும், மஹாவீர் ஜெயின் மேல் நிலைப்பள்ளியில் பயிலும் 32 மாணவர்களுக்கும், 15 மாணவிகளுக்கும் என மொத்தம் 332 மாணவ - மாணவியர்களுக்கு இலவச மிதிவண்டிகள் வழங்கி கல்வியின் அவசியத்தையும், மாணவர்கள் ஒழுக்கமாக கல்வி பயில வேண்டும் என பல அறிவுரைகளை கூறினார்.

பள்ளியின் தலைமை ஆசிரியர் டி.பஞ்சநாதன் அனைவரையும் வரவேற்றார்.

உதவி தலைமை ஆசிரியர் ஏ.சுப்பையன் வருகை தந்தவர்களுக்கு நன்றி கூறினார். இந்நிகழ்வில் பொதுக்குழு உறுப்பினர் வி.இராமநாதன், வட்ட கழக செயலாளர் ஏகா.கார்த்திகேயன், மாவட்ட பிரதிநிதி கே. கார்த்திகேயன், பி.எஸ். சைலேஷ், முன்னாள் பகுதி துணைச் செயலாளர் இ.ரமேஷ், எம்.தயாநிதி, சுற்றுச்சூழல் அணி துணை அமைப்பாளர் பாலஉமாபதி, மாவட்ட வர்த்தக அணி துணை அமைப்பாளர் பிரிட் சுரேஷ், பகுதி பிரதிநிதி கொள்கை மணி, வாழப்பாடி செந்தில், பகுதி மீனவரணி அமைப்பாளர் எஸ்.செல்வம், பகுதி தகவல் தொழில்நுட்ப அணி ஒருங்கிணைப்பாளர் அ.நிர்மல் தாஸ், பகுதி சிறுபாண்மை அணி துணை அமைப்பாளர் எம்.ஜி.யாபேஸ் மற்றும் கழக தோழர்கள் மாணவர்கள் ஆசிரியர்கள் கலந்து கொண்டனர்.

தாய்மடி தமிழ் அமைப்பு மற்றும் தமிழ்நிறம் யூட்யூப் சேனல் சார்பில் கழக செய்தி தொடர்பு துணை தலைவர் கவிஞர் ஆண்டாள் பிரியதர்சினி எழுதிய கலைஞர் 100 பாடல்கள், மேயர் பிரியா ராஜன் வெளியிட கழக செய்தித் தொடர்புத் தலைவர் டி.கே.எஸ். இளங்கோவன், வர்த்தகர் அணிச் செயலாளர் கவிஞர் காசி முத்துமாணிக்கம் பெற்றுக் கொண்டனர்.

தென்னிந்திய நடிகர் சங்கத்தின் முன்னோடி கலைவாணர் என்.எஸ்.கிருஷ்ணன் அவர்களின் 67 வது நினைவு தினத்தை முன்னிட்டு தி.நகர், ஜி.என்.செட்டி சாலையில் அமைந்துள்ள அவரது திருவுருவ சிலைக்கு நேற்று (30.08.2023) காலை நடிகர் சங்க துணைத் தலைவர் பூச்சி எஸ்.முருகன், செயற்குழு உறுப்பினர்கள் லதா, தளபதி தினேஷ், பிரகாஷ் உள்ளிட்ட நிர்வாகிகள் மரியாதை செலுத்தினார்கள். நடிகர் சங்க மேலாளர் தாம்ராஜ் உடன் இருந்தார்.